பக்கங்கள் 21 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு



முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 21 திங்கட்கிழமை 04.03.2024 அதிர்வு 217



# பெருமளவு சனத்திரளுடன் சாந்தனின் இறுதி ஊர்வலம்

## வீதியெங்கும் உறவுகள் கண்ணீர் கதறல்

(எஸ்.நிதர்ஷன்)

**மறைந்த சாந்தனின் (தில்லையம் பலம் சுதேந்திரராஜா) புகழுடலுக்கு இறுதிக்கிரியை இன்று நடைபெற்று பெருமளவு சனத்திரள் மத்தியில் கண்ணீர் கதறலுடன் இறுதி ஊர் வலம் இடம்பெற்று வருகின்றது.**

**உடுப்பிட்டி - இலக்கணாவத்தை யிலுள்ள சாந்தனின் சகோதரி யின் இல்லத்தில் சமயச் சடங்குக ளுடன் இறுதிக்கிரியை நடைபெற் றது.**

சாந்தனின் தாய் மற்றும் சகோதரி உள்ளிட்ட நெருங்கிய உறவுகளால் புகழு டலுக்கு வாய்க்கரிசி போடப்பட்டு ஊர் மக்களால் அருகில் உள்ள சனசமூக நிலையத்துக்குப் புகழுடல் தாங்கிச் செல்லப்பட்டது. அங்கு பொதுமக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

இறுதி ஊர்வலம் அறிவகம் சனசமூக நிலையம் ஊடாக – தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம் ஊடாக – வீரகத்தி விநாயகர் சனசமூக நிலையம் ஊடாக – நாவலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஊடாகப் பயணிக்கின்றது.

இறுதி ஊர்வலம் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிறைவு பெறவுள்ளது. அங்கு புகழுடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

சாந்தனின் புகழுடல் தாங்கிய இறுதி ஊர்வலத்தில் சமயத் தலைவர்கள், அர சியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றுள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 33 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக் கப்பட்ட நிலையில் சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் கடந்த 28ஆம் திகதி மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.



# கனேடியத் தமிழர் பேரவை உலகத் தமிழருக்கு வழிகாட்டி

## தெஹியோவிட்ட தமிழ் வித்தியாலய விஞ்ஞானகூட அங்குராப்பணம் தொடர்பில் மனோ எம்.பி. கருத்து





"இன்று, தமிழர்களாகிய எங்கள் ஒரே ஆயுதம் கல்வி. அதேபோல் எங்கள் ஒரே சிந்தனை தமிழ் ஒற்றுமை. இந்த இரண்டு கொள்கைகளையும் முன்னெடுத்து கனடா தமிழர் பேரவை, அமெரிக்கா முதல் ஐரோப்பா, ஆசியா ஊடாக ஆஸ்திரேலியா வரை உலகம் முழுக்க பரவி, விரவி வாழ்கின்ற தமிழருக்கு, முன்மாதிரியாக நின்று வழிகாட்டியுள்ளது. இந்த இரு கொள்கைகளின் அடையாளமாகவே, இங்கே இன்று இந்த மலையகத் தமிழரினுள் வரும் பெருந்தோட்ட பிள்ளைகள் பயிலும், தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலய விஞ்ஞானகூடம் கட்டப்பட மற்றும் உபகரணங்கள் வழங்க, கனடா மற்றும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் மத்தியில் நிதி சேகரித்து, கனடா தமிழர் பேரவை சாதித்துக் காட்டியுள்ளது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனின் கோரிக்கையின் பேரில், கனடா தமிழர் பேரவையின் நிதி பங்களிப்பால் நிர்மாணிக்கப்பட்ட தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலய விஞ்ஞானகூட அங்குரார்ப்பண விழாவில், மனோ கணேசன் எம்.பி., கனடாத் தூதுவர் எரிக் வொல்ஷ், கனடா தமிழர் பேரவை நிர்வாகிகள் டென்டன் துரைராஜா, துஷ்யந்தன், உமாசுதன் சுந்தரமூர்த்தி, அசோகன் தம்புசாமி, எம்.பிக்களான இராதாகிருஷ்ணன், சுஜித் பெரேரா, உதயகுமார், பாடசாலை அதிபர் திலகலோஜினி, கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் உள்ளிட்ட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். கல்விக்கு முதலிடம், தமிழர் ஒற்றுமை ஆகிய இருமுனை செயற்பாட்டில், கனடா தமிழர் பேரவை ஆற்றியுள்ள பணி தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:–

"இலங்கை அரசிடம் நிதி இல்லை. அது பற்றி ஒப்பாரி வைப்பதில் பயனும் இல்லை. நாளை அரசு மாறினாலும் சடுதி மாற்றம் வரப் போவதும் இல்லை. நிலைமை இயல்பு வாழ்வுக்குத் திரும்பப் பல ஆண்டுகள் ஆகும். இந்நிலையில், ஏற்கனவே இந்நாட்டில் ஒடுக்கப்பட்டு, பாரபட்சமாக நடத்தப்படும் தமிழர்கள், மென்மேலும் துன்பத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

முதலாவது கல்வி. இங்கேதான், உலகம் முழுக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் அடைகின்றது. எம்மில் பல தேவைப்பாடுகள் இருந்தாலும், பிரதான தேவைப்பாடு, கல்வி எனச் சான்றோர் தீர்மானித்துவிட்டார்கள். அதைத்தான் "கல்விக்கு முதலிடம்" என்கின்றோம். கல்வி கிடைத்து விட்டால், ஏனைய எல்லா வளங்களும் வந்து சேர வேண்டிய இடத்தில் வந்து சேர்ந்து, பொருந்திவிடும். அதைக் கனேடியத் தமிழர் உணர்ந்து உள்ளார்கள். இலங்கை முழுக்க வாழும் தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல், உயர்கல்வி வரை மிகப்பெரும் சவால்களை நமது இனம் எதிர்கொள்கின்றது. அவற்றை நாம், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உடன் பிறப்புகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாகச் சந்திப்போம்.

இரண்டாவது, தமிழர் ஒற்றுமை. இந்நாட்டில் தனித்துவ அடையாளங்களைக் கொண்ட ஈழத்தமிழர், மலையகத்தமிழர் ஆகியோர் மத்தியில் ஏற்படக்கூடிய இயல்பான ஒன்றுசேர்வின் மூலமாகவே இலங்கை வாழ் தமிழர் ஒற்றுமை ஓங்க முடியும். எமக்கு வேறு வழி கிடையாது. அதையும் கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள்.

அதன் காரணமாகவே, மலையகத் தமிழரின் இலங்கை குடிபுகு 200 ஆண்டு பூர்த்தியின் அடையாளமாக நிதி சேகரிப்பை நடத்தி இந்தப் பெரும் பணியை ஆற்றியுள்ளார்கள். பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் எம் தமிழர் எம்மையும் அரவணைகின்றார்கள் என்ற செய்தி இன்று இங்கே மலையகத் தமிழ், பெருந்தோட்ட மக்களை உணர்வுபூர்வமாகச் சென்றடைகின்றது. இதைவிடத் தமிழர் ஒற்றுமைக்குச் சான்று என்ன வேண்டும்?

நாம் இப்போது "தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம்" அமைத்துள்ளோம். அதன் தலைவராக, தகைமையுள்ள நண்பர் அதிபர் பரமேஸ்வரனை நியமித்துள்ளோம். நாடாளுமன்றச் சட்டப்படி கூட்டிணைக்கப்படும் இந்தக் கல்வி கழகத்தின், கல்விக்கு முதலிடம் என்ற கருப்பொருளில் இணைய தளம் வெகு விரைவில் அறிமுகமாகும். அதில், இலங்கை முழுக்க அனைத்து மாவட்ட தமிழர் கல்வி தேவைகள் தொடர்பில் நம்பக தன்மை கொண்ட தகவல் பதிவேற்றம் செய்யப்படும். ஆகவே உலக தமிழர் அவற்றை தெரிந்து அறிந்து நேரடியாக உதவிடலாம்." – என்றார்.



# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நீக்கப்படுமாம்

## ரில்வின் சில்வா கூறுகின்றார்

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பியின் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா முதலில் நடத்தப்படும் என்பது எமக்குப் பிரச்சினை கிடையாது. எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் இந்த ஊழல்மிகு ஆட்சியாளர்களை, அரசியல்வாதிகளை விரட்டியடிப்பற்கும், புதியதொரு ஆட்சியை உருவாக்குவதற்கும் நாட்டு மக்கள் தயாராகவே உள்ளனர்.

தேர்தல் காலம் நெருங்கியுள்ள நிலையில் அதனை இலக்கு வைத்துப் பொருட்கள் விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. 20 கிலோகிராம் அரிசி வழங்கப் பார்க்கின்றனர். தண்ணீர் மோட்டர் எனப் பழைய விளையாட்டு மீண்டும் அரங்கேற்றப்படுகின்றது.

அரச அதிகாரிகளால் வழங்கக்கூடிய காணி உரித்து பத்திரத்தைக்கூட மக்களை வரவழைத்து ஜனாதிபதி வழங்குகின்றார். இது தேர்தல் பிரசாரமாகும். இந்த மோசடி – பழைய விளையாட்டு மக்கள் மத்தியில் இனியும் எடுபடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். ஜனநாயக முறைமையிலான ஆட்சிக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் மக்களின் இறைமை பிரதிபளிக்கப்பட வேண்டும். இதனைச் செய்யக்கூடிய ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். அந்தத் தேர்தல் ஊடாக பலமான அரசு நிறுவப்படும். அதன்பின்னர் புதிய அரசமைப்பு இயற்றப்படும். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கக்கூடிய வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும்.” – என்றார்.



# ஹங்வெல்லவில் ஒருவர் சுட்டுக்கொலை!

ஹங்வெல்ல, நிரிபொல பிரதேசத்தில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

மன்னா ரோஷன் என்பவரின் சகோதரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரும் அவருடைய சகோதரரும் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது அவர்களை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இருவரில் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் சென்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



# சாந்தனின் இறுதிக்கிரியை இடம்பெற்று ஆரம்பமான புகழுடலின் இறுதி ஊர்வலம்

















# சாந்தனின் இறுதிக்கிரியை இடம்பெற்று ஆரம்பமான புகழுடலின் இறுதி ஊர்வலம்















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நம்ப முடியாதவர் மைத்திரி

''இலங்கையில் நம்பிக்கை வைக்க முடியாத ஒரே நபர் மைத்திரிபால சிறி சேனதான்.''

- இப்படிக் கூறியிருக்கின்றார் உத்தரலங்க சபாகயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

இந்தக் கருத்தை முன்வைத்த விமல் வீரவன்ஸ நம்பிக்கைக்குரிய நபரா என்பது ஒரு விடயம். ஆனாலும் அவர் கூறிய கருத்தில் அர்த்தம் இருப்பது கவனிக் கத்தக்கது.

மைத்திரிபால சிறிசேன நாற்காலி சின்னத்தில் கூட்டணி ஒன்றை ஆரம்பித்துள்ளார். கூட்டணியில் இணையுமாறு உங்களை அழைத்தார்களா என்று விமல் வீரவன்ஸவிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

''இல்லை. அப்படி அழைத்தாலும் மைத்திரிபால சிறிசேனவுடன் ஈடுபடக் கூடிய அரசியல் எதுவுமில்லை. அவர் எங்களுக்கு அழைப்பும் விடுக்க மாட்டார். அழைத்தாலும் நாங்கள் அதனை ஏற்கவும் மாட்டோம்.

''ஒரு முறை நாங்கள் அவருடன் இணைந்து கூட்டணி ஒன்றை உருவாக்கினோம் என்பது உண்மைதான். கூட்டணி உருவாக்கப்பட்டு மறுநாளே சிறிசேன அந்தக் கூட்டணியை உடைத்தார். ஒரு முறை அப்படிச் செய்த அந்த மனிதரை நம்ப முடியுமா? இலங்கையில் நம்பிக்கை வைக்க முடியாத ஒரே நபர் மைத்திரிபால சிறிசேன'' எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

விமல் வீரவன்ஸவின் கூற்றில் உண்மை இருப்பதை மறுப்பதற்கில்லை. கடந்த பத்து ஆண்டுகளாக சந்தர்ப்பவாத அரசியலை நடத்தித் தம்மை அரசியலில் சீர் கெடுத்தவர் மைத்திரிபால சிறிசேனதான்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகக் கொடி கட்டிப் பறந்த காலத்தில் தமது சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை மைத்திரிக்கு அளித்து அவரை உயர்ந்த இடத்தில்தான் கௌரவமாகப் பேணினார்.

மூன்றாவது ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடவிருக்கையில் முதல் நாள் இரவு அலரி மாளிகையுடன் அவருடன் ஒன்றாக அமர்ந்திருந்து அப்பம் சாப்பிட்டு விட்டு, அடுத்த நாள், மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகத் தம்மைப் பகிரங்கமாக அறிவித்து களமிறங்கினார் மைத்திரி.

சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளருக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் அன்னச் சின்னத்தில் தேர்தலில் நின்று போட்டியிட்டு, எதிரணியின் அயராத முயற்சியினால் எதிர்பாராத வெற்றியையும் ஈட்டிய மைத்திரி, அதன் பின்னர் அந்த எதிர்க்கட்சிகளுக்கும் நேர்மையாகவோ விசுவாசமாகவோ நடக்கவில்லை.

எதிர்க்கட்சி வேட்பாளராக நின்று ஈட்டிய வெற்றியையும், அதனால் கிடைத்த ஜனாதிபதிப் பதவியையும் பயன்படுத்தி, சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து வல்வந்தமாக பிடுங்கி, அதன் தலைவராக இருந்து கொண்டு, தம்மை அதிகாரத்துக்கு கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்க போன்றோருக்கு ஆப்படிக்கத் தொடங் கினார் மைத் திரியார்.

யாரைத் தூற்றித் தாக்கி அதன் மூலம் அதிபர் பதவிக்கு வந்தாரோ, அவருடன் சமரசம் செய்வதற்காக அவரை - மஹிந்த ராஜபக்ஷவை - பின் கதவால் பிரதமராக்கி, தன்னை ஜனாதிபதிப் பதவிக்கு கொண்டு வந்த ரணில் தரப்பின் முதுகில் குத்தினார். அதனால் உயர் நீதிமன்றத்திடம் செமத்தியாகக் குட்டு வாங்க வேண்டியவருமானார்.

அதன் பின்னரும் அவர் திருந்தவில்லை. தாம் கைப்பற்றிய சு.க. தலைவர் பதவியை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு அக் கட்சியையும் உருப்படவிடாமல் தடுத்து வருகிறார்.

ஜனாதிபதி பதவி பறிபோன பின்னர், பொதுத் தேர்தலில் நின்று எம்பியாவதற்காக வேறு வழியின்றி தமது கட்சியை உடைத்து உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுனவிடமே (மொட்டு கட்சியிடமே) தனது சு.கவுடன் சரணாகதி அடைந்தார். தேர்தலில் மொட்டு வேட்பாளராக நின்று எம்.பியானார்.

இப்போது அந்த எம்.பி. பதவியை வைத்துக் கொண்டு அதே மொட்டுக் கட்சிக்கு எதிராக முழுமூச்சாக அரசியல் செய்கிறார்.

'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது தான்' மைத்திரிபால சிறிசேனாவின் பரவணி அரசியலாகக் கடந்த பத்து ஆண்டுகளில் வெளிப்பட்டு நிற்கின்றது.

அவரை நம்பி பிற தரப்புகள் ஏதும் கூட்டணி சேர மாட்டா என்பதுதான் இப்போதுள்ள யதார்த்த நிலைமையாகும்.

இது மைத்திரிக்குப் புரிந்தால் சரி.

# இந்தியா எல்லைக்குள் நுழைந்து போராடுவதே எமது அடுத்த இலக்கு

## யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

இந்திய எல்லைக்குள் நுழைந்து எமது எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பருத்தித்துறை பகுதியில் இருந்து இலங்கை கடல் எல்லைவரை நேற்று (03) இடம்பெற்ற கறுப்புக்கொடி போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துமீறிய இந்திய கடற்றொழிலாளர்களால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வரும் நிலையில் எமது கண்டனத்தையும் எமது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தும் முகமாக இலங்கை கடல் எல்லை வரை எமது கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இதற்கு முன்னரும் அத்துமீறிய இந்திய கடற்தொழிலாளர்களை கட்டுப்படுத்துமாறு கோரிப் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால் தொடர்ந்தும் அவர்களது வருகை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக கடல் வழியாக இலங்கை எல்லைவரை எமது கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இந்தப் போராட்டத்தை ஒரு ஆரம்பப் போராட்டமாகவே பார்க்கிறோம். ஏனெனில் நாம் எமது கடல் எல்லைவரை போராட்டத்தை முன்னெடுத்ததோடு இந்திய எல்லைக்குச் செல்லவில்லை.

இந்திய எல்லைக்கு செல்வோமாயின் என்ன நடக்கும் என்பதும் எமக்குத் தெரியும். ஆனால் அது பற்றி நாம் கவலைப்பட மாட்டோம்.

அத்தோடு எமது கோரிக்கைகளை இலங்கை அரசும் இந்திய அரசும் ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இல்லாத பட்சத்தில் உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்றும் நிலையில் இந்திய எல்லைக்குள் நுழைந்து எமது எதிர்ப்பை வெளியிடுவதே அடுத்த இலக்கு.- என்றார்.



# எரிபொருள்களது விலைகள் இன்று நள்ளிரவு திருத்தப்படும்

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

எரிபொருள் விலை இன்று (04) நள்ளிரவு முதல் திருத்தப்படவுள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த நிலையில், இன்று திருத்தம் இடம்பெறும் என்று கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த விலை திருத்தத்தில் எரிபொருள் விலையில் பெரிய மாற்றம் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலையை மாதாந்தம் திருத்தியமைக்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, கடந்த ஜனவரி 31 ஆம் திகதி எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்டு, ஒக்டேன் 92 பெட்ரோல், ஒக்டேன் 95 பெட்ரோல், சுப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இதேவேளை, மின்சார விநியோகம் மற்றும் பெற்றோலியப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விநியோகம் போன்ற அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய நேற்று (03) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

# வெளிநாட்டுப் பெண் துஷ்பிரயோகம்; 13 வயது பாடசாலை மாணவன் கைது!



வெளிநாட்டு பெண்ணொருவரைத் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் 13 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் தங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய பெண் ஒருவர் குடுவெல்ல கிராமத்துக்குச் சென்றிருந்த போதே இந்தத் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இவர் நேற்று முன்தினம் சனிக் கிழமை பிற்பகல் குடாவெல்ல பகுதியில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்த போது சந்தேக நபரான பாடசாலை மாணவன் தனது நாயுடன் வந்து இந்த பெண்ணிடம் பேச ஆரம்பித்துள்ளார்.

அழகிய இடத்தை காட்டுவதாகக் கூறி அந்த பெண்ணை அழைத்துச் சென்றுள்ளார். இந்த நிலையில் அவரைத் துஷ்பிர யோகம் செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மூன்று வர்த்தக நிலையங்கள் மஸ்கெலியா நகரில் உடைப்பு!

**(மஸ்கெலியா)**

மஸ்கெலியா நகரில் பிரதான வீதியில் உள்ள மரக்கறி விற்பனை நிலையம் ஒன்றும் பஸ் தரிப்பிட வீதியில் இரண்டு வர்த்தக நிலையங்களும் பூட்டு உடைக்கப்பட்டு பணம் சூறையாடப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப் பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமை யாளர்கள் மஸ்கெலியா பொலிஸ் நிலை யத்துக்கு அறிவித்துள்ளனர். எனினும் வழக்கு பதிவு செய்ய வேண்டாம் என்று கேட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நகரில் உள்ள சீசீ டிவி கமராக்கள் பார்வை யிடப்பட்டுள்ளன என்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.



# 134 பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதைப் பொருளுக்கு அடிமை!

## பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவிப்பு

போதைப் பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகியுள்ள சுமார் 134 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், போதைப் பொருள் பயன்பாட்டுக்கு அடிமையான பொலிஸ் உத்தியோகத் தர்களுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட உள்ளது.

மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளத் தவறும் நபர்கள் சேவையிலி ருந்து விலகியதாக அறிவிக்கப்பட உள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாட்டை இல் லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு ஊட்டும் நோக்கில் பல் கலைக்கழக மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாட சாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி களை முன்னெடுப்பார்கள்.-என்றார்.



# திருமலை மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் மூன்று நிகழ்வுகள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

திருக்கோணமலை மாற்றுத் திறனாளிகள் அபிவிருத்திச் சங்கத்தின் 15 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும், மருத்துவ முகாமும் திருக் கோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றன.

மாற்றுத் திறனாளிகள் அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஊன்றுகோல், சற்கர நாற்காலி, கற்றல் உபகரணங்கள் உட்பட பழமரக் கன்று களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், பொருளாளர் இராசரெத்தினம் கோகுலதாசன், லயன்ஸ் கழக ஆளுநர் ஜனரஞ்சன், மூத்த மருத்துவர் அருள்குமரன், மருத்துவர் பிரதீபா, மருத்துவர் உஷா நந்தினி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த ஜலால், சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# சந்நிதியான் ஆச்சிர 314 ஆவது ஞானச்சுடர் மாத இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த இதழான ஞானச்சுடர் 314 ஆவது இதழ் கடந்த வெள்ளிக்கிழமை (01) வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சந்தியான் ஆச்சிரமம் முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் திருமுறை ஓதுதலுடன் நகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் வெளியீட்டு உரையை யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் பெறுவதற்கு அழைக்கப்பட்டவர்களுக்குச் சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் நீண்ட தூரம் சைக்கிளில் சென்று கல்விகற்றுவரும் 5 மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமராட்சி ஊடக இல்லத்துக்கு மடிக்கணினி ஒன்றும் வழங்கப்பட்டது.

அதேவேளை ஞானச்சுடர் வாசகர்களுக்காக நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று வெற்றியாளர் உட்பட 10 பேருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.











# தெல்தொட்ட, பலேகம பிரதேசத்தில் சுத்தமான குடி தண்ணீர் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெல்தொட்ட, பலேகம பிரதேசத்தில் 450 இற்கும் அதிகமான குடும்பங்க ளுக்கு சுத்தமான குடி தண்ணீர் திட்டம் கையளிக்கப்பட்டது.

பலேகம பகுதி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான குடி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சா மியின் கோரிக்கைக்கு அமைவாக குவைத் நாட்டின் அல் நூர் தொண்டர் நிறுவனத்தின் ஊடாக பத்து மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அமைச்சர் ஜீவன் தொண டமான் அனைவருக்கும் சுத்தமான குடி தண்ணீர் என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு சிறந்த முறையில் குடி தண்ணீர் திட்டம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அல்நூர் தொண்டர் நிறுவனத்தின் தலைவர் முஹம்மட் அலி யார், பலேகம பள்ளிவாசல் தலைவர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரி யர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஊர் பெரியவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# பெரும்போக நெல் அறுவடையில் 15 சதவீதம் வரையில் இழப்பீடுகள்

பெரும்போக நெல் அறுவடையின் போது, 10 முதல் 15 சதவீதம் வரை இழப்பீடு அதிகரித்துள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் விவசாய அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பெரும்போக நெல் அறுவடையின் போது, 10 முதல் 15 சதவீதம்வரை இழப்பீடு அதிகரித் துள்ளது. சில பகுதிகளில் அது 25 சத வீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி, பெரும்போகத்தில் 3 லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயிர்ச் சேதங்களால் ஏற்பட் டுள்ள இழப்பு பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதி என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

நெற்பயிர் நீண்டகாலமாக பயிரிடப் பட்டிருந்தாலும் அது எப்போது விளை யும் என்ற புரிதல் இல்லாமையே இதற்கு பிரதான காரணமாகும் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது.



# அட்டாளைச்சேனை அல் முனீறா மாணவிகள் மூன்று பேர் சாதனை

(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவிகள், அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் 4 ஆவது இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தரம் 11 பிரிவில் அனீஸ் அலி அப்றோஸ் சஹானி முதலாவது இடத்தையும், தரம் 08 பிரிவில் ஹனீஸ் ஆய்ஷா அனீகா இரண்டாவது இடத்தையும் தரம் 06 பிரிவில் றஸ்ல்தீன் ஆறா அதுன் சாறா 4 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்படி சமூக விஞ்ஞானப் போட்டியின் முடிவுகளே அண்மையில் வெளியாகின.

இதனையடுத்து வெற்றியீட்டிய மாணவிகளை பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

சமூக விஞ்ஞான போட்டிகள் கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டங்களில், தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையிலான பிரிவுகளுக்கு நடைபெறுகின்றன.



# மருதமுனையில் இரத்ததான முகாம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



மருதமுனை 'மனாரியன்ஸ் 99' அமைப்பு கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி பெண்கள் பிரிவு வளாகத்தில் அமைப்பின் தலைவர் எம்.எம்.பஸீல் தலைமையில் நடைபெற்றது.

இதில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் 1999 ஆம் ஆண்டு சாதாரண தரம் கல்வி கற்ற மாணவர்களில் ஒருவரான திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டு இரத்த தானம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி டாக்டர் பி.எம்.கவிதா, பாடசாலையில் அதிபர் ஐ.உபைதுல்லா உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபையின் எட்டாவது வருட நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)

மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபையின் எட்டாவது வருடாந்த நிகழ்வு அதன் தலைவரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளருமான ஏ.எம். ஜாஹிர் தலைமையில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபையின் உத்தியோக பூர்வ ரீ சேட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.





# செயற்றிறனில் தேசிய மட்டத்துக்கு தெரிவான கல்முனை மாநகர சபை




(அஸ்லம் எஸ். மௌலானா)

2023 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிடையான செயற்றிறன் மதிப்பீட்டுப் போட்டியில் கல்முனை மாநகர சபையானது கூடிய புள்ளிகள் பெற்று தேசிய மட்ட மதிப்பீட்டுக்குத் தகுதி பெற்றுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலா ளரால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள தெரிவுப் பட்டியலில் இந்தத் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் என்பனவற்றின் கண்காணிப்பில் சுயாதீனமான நடுவர்கள் மூலம் மாகாண மட்டத்திலான மதிப்பீடு இடம் பெற்றுள்ளது.



# கிண்ணியா கடற்றொழிலாளர்களது பிரச்சினையைக் கேட்டறிந்த டக்ளஸ்

(ஹஸ்பர்)

கிண்ணியாவுக்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுடனான சந்திப்பில் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் அழைப்பின் பேரில் இடம் பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய நேற்று முன்தினம் (02) அமைச்சர் கிண்ணியா வுக்குச் சென்று மீனவர்களின் பிரச்சினைகளை நேரடியாக கேட்டறிந்தார்.



இந்தச் சந்திப்பில் திருகோணமலை கடற்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர் இஷார தரிந்து கண்காணம்கே, சுருக்கு வலை சங்க தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சேருவில தொகுதி அமைப்பாளருமான சரத் லோரன்ஸ், முன்னாள் நகர சபை உறுப்பினர் கலபதுள்ளாஹ், கிண்ணியா மீனவ மகா சங்க தலைவர் ரிஜால் பாயிஸ், பைரூஸ், ஆரிஸ் உள்ளிட்ட மீனவர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# வாகரையில் பெண்களுக்கு பனம் பொருள் பயிற்சி நெறி

(பழுவூரான்)

வாகரைப் பிரதேச செயலகம், பனை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜி.ரி.இசற். நிறுவனம் ஆகியன இணைந்து கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வாகரை கிராம சேவகர் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை (01) பனம் பொருள் உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களை பயிற்சிவிக்கும் நோக்கோடு 30 பெண் பயனாளிகளை இலக்காகக் கொண்டு புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைத்துள்ளன.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் சி.விஜயந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பனை அபிவிருத்திக்கான முகாமையாளர் த.விஜயன் உட்பட கோறளைப்பற்று பிரதேச செயலகம் சார்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக 09 மாதங்கள் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நெறி மாதம் ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பனை உற்பத்திகளை மேற்கொள்வர் என்றும் நேரடியாக பனை அபிவிருத்தி அதிகார சபையே அந்தப் பொருள்களைச் சந்தைப் படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு திறந்த பல்கலையில் தாய்மொழி தினக் கொண்டாட்டம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு திறந்த பல் கலைக்கழகத் தாய்மொழித்தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட கேட்போர் கூடத்தில் கொண்டாடப்பட்டது .

திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் எந்திரி ஏ.டி. கமலநாதன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மற்றும் மாணவர்கள் கலந்து கொண டனர்.

இதன்போது மாணவர்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் அரங்கேற றப்பட்டன. தமிழ் மொழியின் அருமை, பெருமைகள் பற்றி விளக்கமாக விரிவு ரையாளர்களாலும் மாணவர்களாலும் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த விழா திறந்த பல்கலைக்க ழகத்தின் தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்பு கலைமாமணி கற்கை நெறி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.












# மன்னார் பேசாலையில் நடைபெற்ற இரத்ததானம்

(மன்னார் நிருபர்)

மன்னார் பேசாலை வளர் கலை மன்றத்தின் ஐம்பதாம் ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு மன்னார் பேசாலை பிரதேச வைத்தியசாலையில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (2) இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட வைத்திய சாலைகளில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தக் குருதி நன்கொடை நிகழ்வு இடம் பெற்றது.



பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தின் பங்கு தந்தை மற்றும் பேசாலை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலை குருதி கொடை பிரிவு வைத்திய அதிகாரி மற்றும் வளர் கலை மன்றத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# திருமலை ஆத்திமோட்டையில் சாந்தனுக்கு அஞ்சலி நிகழ்வு!

தியாகி சாந்தனுக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இலங்கை தமிழரசு கட்சியின் சாம்பல்தீவு கிளை ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டம் ஆத்தி மோட்டை பகுதியில் இடம்பெற்றது.

நிகழ்வானது, நேற்று (03) நடைபெற்றுள்ளது.

இந்த அஞ்சலி நிகழ்வில், மாவட்ட கிளையின் பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஷ் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் முருகதாஸ், ஆதரவாளர்கள் மற்றும்சமூகஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.




# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டு நூல் தொகுதி அறிமுகம்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் ஏற்பாடு செய்த தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் (தமிழ்) மொழி பெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' (தமிழ்) நூல் வெளியீடும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நேற்று (03) பல்கலைக்கழக கலை கலாச்சார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.



ஒலிபரப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீட் நெறியாள்கையில் இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையை கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில், தலைமையுரையை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சிறப்புரைகளை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். எம்.எம். மஸாஹிர், இந்திய சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே. எம். இல்யாஸ் ரியாஜி, இந்திய புதுப் பேட்டை மஸ்ஜிதே மஹ்மூதின் தலைமை இமாம் ஹாபிழ் ஏ. பீர்முகம்மது பாகவி ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் ரஹ்மத் பதிப்பகத்தின் நிறுவனர் எம்.ஏ முஸ்தபா, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரிடம் நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்றை வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.

அதேவேளை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீடத்துக்கும் நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்று வழங்கப்பட்டது. அத்துடன் தென்கிழக்கு பல்கலைக்கழக அஷ்ரப் ஞாபகார்த்த நூலகத்துக்கும் நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதனை நூலகர் எம். எம்.றிபாவுடீன் பெற்றுக்கொண்டார்.

நூல் வெளியீட்டில் நூலின் முதல் பிரதியை எம்.ஏ. முஸ்தபா விடம் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி பெற்றுக்கொண்டார்.





# வாழ்வாதார உதவிகள் வவுணதீவில் வழங்கல்

(பழுவூரான்)

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார சிற்றுண்டி உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை (01) பிரதேச செயலாளர் ந.சத்தியானந்தி தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





## 1,000 பிரபலங்கள், 2,500 வகை உணவுகள்:

# 1,250 கோடி ரூபா செலவில் அம்பானி வீட்டுத் திருமணம்

தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானியின் திருமண முன்வைபவம் குஜராத்தின் ஜாம்நகரில் கடந்த 3 நாள்களாக நடைபெற்றது. இதில் 1,000 பிரபலங்கள் பங்கேற்றனர். 2,500 வகையான உணவுகள் பரிமாறப்பட்டன. ஒட்டு மொத்தமாக 1,250 கோடி ரூபா செலவிடப்பட்டு உள்ளது.

தொழிலதிபர் முகேஷ் அம்பானி–நீடா அம்பானி தம்பதிக்கு இரு மகன்கள், ஒரு மகள் உள்ளனர். மூத்த மகன் ஆகாஷ், மகள் இஷா இரட்டையர்கள் ஆவர். இருவருக்கும் திருமணமாகி விட்டது. கடைசி மகன் ஆனந்துக்கும் (வயது 28) ராதிகா மெர்ச்சென்டுக்கும் (வயது 29) கடந்த ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இருவருக்கும் எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி திருமணம் நடைபெற உள்ளது.

இந்த சூழலில் கடந்த 1 ஆம் திகதி திருமண முன்வைபவ நிகழ்ச்சிகள் குஜராத்தின் ஜாம்நகரில் தொடங்கியது. இது முகேஷ் அம்பானியின் தாய் கோகிலா பென்னின் சொந்த ஊர் ஆகும். இங்கிருந்துதான் அம்பானி குடும்பத்தினர் தங்கள் தொழிலை தொடங்கினர்.

ஜாம்நகரில் 400 ஏக்கரில் புதிய நகரத்தையும் 3,000 ஏக்கரில் 'வந்தாரா' என்ற புதிய வனத்தையும் அம்பானி குழுமம் உருவாக்கி உள்ளது. இங்குதான் ஆனந்த் அம்பானி திருமண முன்வைபவ நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி ஜாம்நகரில் உள்ள விமான நிலையம் 10 நாள்களுக்கு மட்டும் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டது. நாள்தோறும் 140 விமானங்கள் ஜாம்நகர் விமான நிலையத்தில் தரையிறங்கின.

கடந்த 1 ஆம் திகதி முதல் நாள் நிகழ்ச்சியில் அமெரிக்க பாடகியும் நடிகையுமான ரிஹானாவின் இசைக் கச்சேரி நடைபெற்றது. இந்த இசைக் கச்சேரிக்காக மட்டும் 75 கோடி ரூபா செலவிடப்பட்டது.

இரண்டாம் நாளில் விருந்தினர்கள்




அனைவரும் ஜாம்நகரில் உள்ள 3,000 ஏக்கர் வனத்தை சுற்றி பார்த்தனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மூன்றாம் நாளான நேற்று வந்தாராவனப்பகுதியில் உள்ள யானைகளை பார்க்க விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மாலையில் இசைக்கச்சேரி, ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நடிகர் ரஜினி காந்த், மனைவி லதா, மகள் ஐஸ்வர்யாவுடன் நேற்று ஜாம் நகருக்கு சென்றார். நடிகர்கள் அமிதாப் பச்சன், ஷாருக்கான், சல்மான்கான், அமீர்கான், சஞ்சய்தத், அபிஷேக் பச்சன், ராம் சரண், சயீப் அலிகான், ரன்பீர் சிங், ரன்வீர் சிங், நடிகைகள் ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், தீபிகா படுகோன், சாரா அலிகான், அலியா பட், ஜான்வி கபூர், கத்ரினா கைஃப், இயக்குநர் அட்லி உட்பட ஒட்டுமொத்த இந்திய திரையுலகமும் ஜாம் நகரில் குவிந்தது.

கிரிக்கெட் வீரர்கள் சச்சின், டோனி, ரோகித் சர்மா, ஹர்திக் பாண்டியா, பிராவோ, ரஷித் கான் உட்பட ஏராளமான விளையாட்டு பிரபலங்களும் விழாவில் பங்கேற்றனர். மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா உட்பட ஏராளமான அரசியல் தலைவர்களும் விழாவில் பங்கேற்றனர்.

அமெரிக்காவின் மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ், பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா உட்பட வெளிநாட்டு பிரபலங்களும் இந்தியாவை சேர்ந்த ஆனந்த் மஹிந்திரா உள்ளிட்ட பெரும் தொழிலதிபர்கள் என மொத்தம் 1,000 சிறப்புவிருந்தினர்கள் 3 நாள்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

காலை, மதியம், இரவு வேளைகளில் இந்தியா, தாய்லாந்து, மெக்சிக்கோ என பல்வேறு நாடுகளை சேர்ந்த 2,500 இற்கும் மேற்பட்ட உணவு வகைகள் பரிமாறப்பட்டன. உணவுக்காக மட்டும் 130 கோடி ரூபா செலவிடப்பட்டது. விருந்தினர்கள் தங்குவதற்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய கூடார வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

உள்நாடு, வெளிநாட்டு ஊடகங்களில் அம்பானி வீட்டு திருமண வைபவ நிகழ்ச்சிகள் முக்கிய இடத்தைப் பிடித்தன. இந்தியா மட்டுமன்றி ஒட்டு மொத்த உலகத்தின் கவனத்தையும் திருமண முன்வைபவ நிகழ்ச்சிகள் ஈர்த்துள்ளன.

ஜாம்நகரில் கடந்த 3 நாள்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக மட்டும் 1,250 கோடி ரூபா செல விடப்பட்டு உள்ளது. திருமண முன்வைபவமே இவ்வளவு பிரம்மாண்டமாக நடத்தப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி மும்பையில் நடைபெற உள்ள திருமண விழா பிரம்மாண்டத்துக்கே சவால் விடுக்கும் வகையில் இருக்கும் என்று அம்பானி குழும வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





# பிரதமர் மோடியின் தமிழக வருகை எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது

## முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கருத்து



பிரதமர் மோடியின் வருகை தமிழகத்தில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 76 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, சென்னை ராயபுரத்தில் நேற்று நடைபெற்றது. கட்சியின் அமைப்புச் செயலாளர் ராயபுரம் மனோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் பங்கேற்று, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பிரதமர் மோடி தமிழகத்துக்கு வருவதால் எந்தத்தாக்கமும் ஏற்படாது. பா.ஜ.க. வழக்கமாக வாங்கும் வாக்குகளைவிட 1 சதவீதம் வாக்குகள் கூடலாம். அவர்கள் சமூக ஊடகங்களை நம்பியுள்ளனர்.

தமிழகத்தை பொறுத்தவரை பா.ஜ.க. பூஜ்ஜியம்தான். அவர்களின் மிரட்டலுக்கு அஞ்சும் இயக்கம் அ.தி.மு.க. இல்லை. யாரையும் நம்பி நாங்கள் இல்லை. மக்களின் ஆதரவு அ.தி.மு.க.வுக்குதான்.” – என்றார்.

# ஆன்மிகத்தால் இந்தியாவுக்கு சிறப்பிடம்: ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து



ஆன்மிகத்தால்தான் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் மாசி கொடைவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த விழாவில் பங்கேற்ற தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், கோயில் வளாகத்தில் ஹைந்தவ சேவா சங்கம் சார்பில் நடைபெற்ற 87 ஆவது இந்து சமய மாநாட்டை தொடங்கிவைத்தார்.

இந்த மாநாட்டில் அவர் உரையாற்றுகையில்,

“இந்தியர்களின் 500 ஆண்டுகாலகனவு அயோத்தி ராமர் கோயில் மூலம் நனவாகி உள்ளது. ஆன்மிகம் தழைக்கும் நாடு, நன்றாக இருக்கும். உலகில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதற்குக் காரணம் நம் நாட்டில் மேலோங்கியுள்ள ஆன்மிகம்தான்.

ஆன்மிகத்துடன் தேசியமும் வளர்கிறது. நான் பிறந்த இந்து மதத்தைப் பின்பற்றுகிறேன். என் மதம்பற்றி பேசினால், மதவாதி என்கிறார்கள். மதவாதி என்கிறவர்களை நான் எதிர்க்கிறேன்.

இந்தியாவின் பண்பாடு, கலச்சாரம் நல்ல வாழ்வியலைத் தருகிறது. இதை இந்து மதம் கற்றுக்கொடுக்கிறது.” – என்றார்.

# மம்தாவின் தவறான ஆட்சியால் குற்றங்களும், ஊழலும் அதிகரிப்பு

## மேற்குவங்கத்தில் பிரதமர் மோடி உரை

மம்தா பானர்ஜியின் தவறான ஆட்சியின் காரணமாக மேற்கு வங்கத்தில் குற்றங்களும் ஊழலும் அதிகரித்துள்ளன என பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக மேற்கு வங்கம் சென்ற பிரதமர் மோடி, ஹூக்ளியில் உள்ள அரம்பாக் நகரில் 7,200 கோடி ரூபா மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“உள்கட்டமைப்பு கண்ணோட்டத்தில், ரயில்வே மேற்கு வங்கத்தின் புகழ்பெற்ற வரலாற்றின் ஒரு பகுதியாக உள்ளது. ஆனால் சுதந்திரத்துக்குப் பிறகு முன்னேறுவதற்கான வாய்ப்புகளை வங்கத்தால் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. வளர்ச்சிக்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் இருந்தும் வங்கம் பின்தங்கியே இருந்தது.

கடந்த 10 ஆண்டுகளில், அந்த இடைவெளியைக் குறைக்க இங்குள்ள ரயில் கட்டமைப்புக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இன்று நமது அரசு, வங்கத்தின் ரயில் கட்டமைப்புக்கு முன்பை விட இரண்டு மடங்கு அதிகமாக செலவு செய்கிறது.

மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரின் செயல்பாட்டால் மக்கள் மிகப் பெரிய




அளவில் அதிருப்தி அடைந்துள்ளனர். அந்த கட்சிக்கு மக்கள் தொடர்ச்சியாக வாக்களித்தும்கூட, அது அராஜகங்களில் ஈடுபட்டு முதுகில் குத்திவிட்டது. வங்கத்தை வளர்ச்சிபெறச் செய்வது அல்ல திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நோக்கம். ஊழலும் வாரிசு அரசியலும்தான் அதன் முன்னுரிமை. மக்களை ஏழ்மையிலேயே வைத்திருக்க திரிணமூல் காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. அப்போதுதான், அது தனது கொள்கைகளைத் தொடர முடியும். விளையாட்டைத் தொடர முடியும்.

மேற்கு வங்கத்தில், திரிணமூல் காங்கிரசின் குண்டர்களும், நில மாஃபியாக்களும் அராஜகத்துடன் நடந்து கொள்ள வெளிப்படையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மம்தா பானர்ஜி அரசு சுற்றுச்சூழல் தொடர்பான அனுமதிகளில் தடைகளை உருவாக்குகிறது.” – என்றார்.



# நேபாளத்தில் ஆளும் கூட்டணியில் பிளவு: புதிய அரசு இன்று பதவியேற்கவுள்ளது

நேபாளத்தில் ஆளும் நேபாள கொம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நேபாளி காங்கிரஸ் கூட்டணி முறிந்ததை அடுத்து, இன்று புதிய அரசு பதவியேற்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

நேபாளத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து, புஷ்ப குமார் தமல் தலைமையிலான நேபாள கொம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஷே பகதூர் துபே தலைமையிலான நேபாளி காங்கிரஸ் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைத்தன. இந்த கூட்டணி முடிவுக்கு வந்திருப்பதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முன்னாள் நிதி அமைச்சரும், நேபாள் கம்யூனிஸ்ட் கட்சி – ஒருங்கிணைந்த மாக்ஸ்சிஸ்ட் லெனினிஸ்டின் துணைத் தலைவருமான சுரேந்திர பாண்டே தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இன்று ஆட்சி மாற்றம் நிகழ்கிறது. புதிய அமைச்சரவை பதவியேற்க இருக்கிறது. சிறிய எண்ணிக்கையில் அமைச்சர்கள் பதவியேற்பார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் புஷ்ப குமார் தமல் தலைமையிலான புதிய அமைச்சரவையில் சி.பி.என்-யு.எம்.எல், ராஷ்ட்ரிய ஸ்வதந்திரா கட்சி, ஜனதா சமாஜ்வாதி கட்சி ஆகியவை இணைய உள்ளன.

நேபாள நாடாளுமன்றதின் மேலவைத் தலைவர் பதவிக்கு, நேபாளத்தின் இரு பெரும் கட்சிகளான நேபாள கொம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நேபாளி காங்கிரஸ் ஆகியவை இடையே போட்டி ஏற்பட்டிருப்பதே ஆட்சி மாற்றத்துக்குக் காரணம் என கூறப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி கூடிய, மாவோயிஸ்ட் மையத்தின் மத்திய குழுக் கூட்டத்தில், மேலவைத் தலைவர் பதவிக்கு கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

இதற்கு நேபாள காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெறும்போது, தங்கள் கட்சி நேபாள காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளிக்கும் என்று புஷ்ப குமார் தமல் ஏற்கனவே வாக்குறுதி அளித்தார் எனவும் தற்போது அந்த வாக்குறுதி மீறப்படுவதாகவும் நேபாள காங்கிரஸ் குற்றம் சாட்டி உள்ளது.

இதற்கு பதில் அளித்துள்ள மாவோயிஸ்ட் மையத்தின் செய்தித் தொடர்பாளர் அக்னி பிரசாத் சப்கோடா, "நாடாளுமன்ற மேலவைத் தலைவர் பதவிக்கு கட்சி போட்டியிட வேண்டும் என மத்தியக் குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே வேட்பாளர் நிறுத்தப்பட இருக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பரத்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் புஷ்ப குமார் தமல், "பெரும்பாலான மத்தியக் குழு உறுப்பினர்களின் முடிவின்படி நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவிக்கு கட்சி போட்டியிடுகிறது. எழுத்துப்பூர்வ உத்தரவாதம் எதையும் நாங்கள் நேபாள காங்கிரஸ் கட்சிக்கு அளிக்கவில்லை. எங்கள் கட்சி சார்பில் நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவிக்கு கிருஷ்ணா சிதுவாலா போட்டியிடுவார்" எனத் தெரிவித்துள்ளார்.

59 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள மேலவையில் மாவோயிஸ்ட் மையம் 17, நேபாளி காங்கிரஸ் 16, சிபிஎன்-யுஎம்எல் – 19, சி.பி.என்– 8, ஜனதா சமாஜ்வாதி கட்சி – 3, ராஷ்ட்ரிய ஜனமோர்ச்சா சமாஜ்வாதி கட்சி – 1 உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர்.

மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் ஒரு உறுப்பினரை நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பாதெல் நியமிப்பார். நேபாள நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. அதற்கான வேட்புமனு தாக்கல் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

# இந்தியாவால் தீவிரவாதியென அறிவிக்கப்பட்டவர் பாகிஸ்தானில் மர்மமான முறையில் உயிரிழப்பு

இந்தியாவில் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய பல தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ளனர். இவர்கள் கடந்த சில மாதங்களாக மர்மமான முறையில் உயிரிழந்து வருகின்றனர்.

காஷ்மீரின் சுன்ஜ்வான் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி காஜா சாஹித் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் கடந்தாண்டு நவம்பர் மாதம் கொல்லப்பட்டார். அதே மாதத்தில் லஷ்கர் கமாண்டர் அக்ரம் காஜி பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். லஷ்கர் கமாண்டர் அபு ஹன்சாலா கராச்சியில் கடந்தாண்டு டிசம்பரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில், யுனைடெட் ஜிகாத் கவன்சில் என்ற தீவிரவாத அமைப்பின் தலைமை செயலாளராக செயல்பட்ட ஷேக் ஜமீல்-உர்-ரகுமான் கைபர் பக்துங்க்வா பகுதியில் உள்ள அபோதாபாத் சிறையில் மர்மமான முறையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவர் காஷ்மீரின் புல்வாமா பகுதியில் செயல்பட்ட தக்ரீக்-அல்-முஜாகிதீன் என்ற அமைப்பின் தலைவராக இருந்தார். இவரை மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தீவிரவாதியாக அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.





# ஹெய்ட்டி சிறை மீது தாக்குதல்; பல கைதிகள் தப்பியோட்டம்

ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பிரதான சிறைச்சாலை மீது ஆயுதமேந்திய குழுவொன்று தாக்குதல் நடத்தி பல கைதிகளை விடுவித்துள்ளது.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 4 ஆயிரம் ஆண் கைதிகளில் பெரும்பாலோர் இவ்வாறு தப்பியோடியுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

தப்பிச் செல்ல முயன்ற மூன்று கைதிகள் சிறைச்சாலை முற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தப்பிச் சென்ற கைதிகளில், 2021 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோவெனல் மோஸசின் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஏரியல் ஹென்றியை பதவி நீக்கம் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வரும் குழுவொன்று போர்ட்-ஓ-பிரின்ஸின் 80 சதவீதமான பகுதியைக் கட்டுப்படுத்துகின்றது.

வன்முறையின் அண்மைய எழுச்சி கடந்த வியாழக்கிழமையன்று தொடங்கியது.

கென்யா தலைமையிலான சர்வதேச பாதுகாப்புப் படையை ஹெய்ட்டிக்கு அனுப்புவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பிரதமர் நைரோபிக்குச் சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.





# ஊட்டச்சத்து குறைபாடு, நீரிழப்பால் காசாவில் 15 குழந்தைகள் உயிரிழப்பு!

காசாவில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனையில் ஊட்டச்சத்து குறைப்பாடு மற்றும் நீரிழப்பு காரணமாக 15 குழந்தைகள் உயிரிழந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் சுகாதார அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்திய காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் காசா மீதான் இஸ்ரேலிய தாக்குதலில் இதுவரை 30 ஆயிரத்து 410 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பக்கங்கள் - 4

கனடா முரசு

திங்கட்கிழமை 04/03/2024

## வூட்பிரிட்ஜ் பகுதியில் 16 வயது யுவதி மீது சூடு

ஒன்ராரியோ, மாரச் 04

வூட்பிரிட்ஜ் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 16 வயதான யுவதி ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் C2▶




# கனடா-இத்தாலி பிரதமர்களின் விருந்து போராட்டத்தால் ரத்து!

## தீவிர விசாரணை நடத்தும் பொலிஸார்

ஒன்ராரியோ,மார்ச்04

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் இத்தாலியப் பிரதமர் ஜியோஜியா மெலோனி ஆகியோருக்கு இடையிலான விருந்துபசாரம் இரத்து செய்யப்படுவதற்கான காரணமான போராட்டம் குறித்துப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மார்ச் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஒன்ராரியோ கலைக் கூடத்தில் நடைபெறவிருந்த இந்த விருந்துபசாரம், பலஸ்தீனத்திற்கு ஆதரவான கோஷங்களுடன் மக்கள் அணிதிரண்டதால் இரத்துசெய்யப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது சட்டவிரோத செயற்பாடு ஏதும் இடம்பெற்றதா என்பது தொடர்பில் டொரன்டோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



இஸ்ரேல் – ஹமாஸ் போரை மத்திய அரசு கையாள்வதை விமர்சித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், 'ஜஸ்டின் ட்ரூடோ ஒரு பொய்யர்', 'ஜஸ்டின் இனப்படுகொலை'என கோஷங்களை எழுப்பினர்.

# தோர்ன்ஹில் ஆர்ப்பாட்டத்தில் குழப்பம் ஏற்படுத்தியவர் கைது



ஒன்ராரியோ, மார்ச் 04

ஞாயிற்றுக்கிழமை தோர்ன்ஹில்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆணி அறையைப் பயன்படுத்தும் துப்பாக்கியைக் கொண்டு வந்தவர் எனக் கூறப்படும் 27 வயது இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளார்க் அவென்யூ மேற்கு மற்றும் தெற்கு ப்ரோமனேட் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

ஆண் சந்தேக நபரால் ஆயுதத்தால் தாக்கப்பட்டார் எனப் பாதிக்கப்பட்ட ஒருவர் முறைப்பாடு அளித்தமையை அடுத்து, C2▶




# இலத்திரனியல் வாகனங்களுக்கு 200 டொலர் பதிவுக் கட்டண வரி

## அல்பேர்ட்டா மாநிலத்தில் அடுத்த ஆண்டு முதல்

அல்பேர்ட்டா,மார்ச்04

அல்பேர்ட்டா மாநிலத்தில் இலத்திரனியல் வாகனங்களுக்கு 200 டொலர்கள் பதிவு கட்டண வரி அறவிடப்படுவது வாகன உரிமையாளர்கள் மத்தியில் விவாதத்தை எழுப்பியுள்ளது.

2024-25 காலப்பகுதியில் சுமார் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை இதன் மூலம் வருமானமாக அல்பேர்ட்டா மாநிலம் எதிர்பார்த்துள்ளது.

வருடாந்தம் இலத்திரனியல் வாகனங்களின் கொள்வனவு கனடாவில் அதிகரித்து வருகின்ற நிலையில், அல்பேர்ட்டா மாநில அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் ஆச்சரியமளிக்கவில்லை என மாநிலத்தின் இலத்திரனியல் வாகன உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய கட்டணம் ஜனவரி 2025 முதல் அமுலுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**தோர்ன்ஹில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9:45 மணியளவில் தாங்கள் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டனர் எனப் யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் மூலம், பாலஸ்தீனிய சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அருகே ஒரு ஆண் தனது வாகனத்தை நிறுத்தி அவர்களை ஆபாசமாகக் கத்த ஆரம்பித்ததாகக் கூறிய பல சாட்சிகளை அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

அதே நேரத்தில் சந்தேகநபர் எதிர்ப்பாளர்களில் மூவருடன் மோதலில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

---

**வூட்பிரிட்ஜ் பகுதியில்**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாரச் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக யோர்க் பிராந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யுவதி மீதான துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எவ்வாறான துப்பாக்கிப் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரியுமாயின் பொலிஸாருக்கு தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.





# மற்றுமொரு சுற்றுத் தடைகளை ரஷ்யாவின் மீது விதித்தது கனடா


ஒன்ராரியோ, மாரச்04

ரஷ்ய அரசாங்கத்தின் மீது மற்று மொரு சுற்று தடைகளை கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைர் அலெக்ஸி நவால்னியின் மரணத்தைத் தொடர்ந்து, இந்த புதிய தடைகள் விதிக்கப்படுவதாக மார்ச் 3ஆம் திகதி கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஆறு சிரேஷ்ட அதிகா ரிகள் மற்றும் உயர்நிலை ஊழியர்கள் மீது இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்டவர்கள் நவால்னி யின் மரணத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனவும், மனித உரிமை மீறல்கள், கொடூரமான தண்டனை மற்றும் இறுதி யில் மரணத்திற்கு வழிகோலின என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## இம்முறை வசந்தம், கோடை காலத்தில் ஒன்ராரியோவில் உயர்ந்த வெப்பநிலை!

ஒன்ராரியோ, மாரச் 04

ஒன்ராரியோ மாநிலத்தில் இம்முறை வசந்த காலம் மற்றும் கோடை காலத்தில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படலாம் எனச் சுற்றுச்சூழல் கனடா மற்றும் எக்யு வெதர் என்பன எச்சரித்துள்ளன.

அடுத்த சில மாதங்களுக்கு வெப்பநிலை அதிகமாக காணப்படும் என முன்னணி வானிலையாளர் டேவிட் பிலிப்ஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாநிலங்களில் அதிகம் பனிப்பொழிவு இல்லாத குளிர்காலம் நிறைவினை எட்டுகின்ற நிலையில், இம்முறை வசந்த காலம் மற்றும் கோடைக் காலத்தில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

அதிகம் குளிர் இல்லாத குளிர்காலமானது வானிலை யில் எல்நினோ மாற்றத்தை ஏற்படுத்துவதால், 2024ஆம் ஆண்டு முழுவதிலும் வானிலையில் பெரும் மாற்றங்கள் நிகழக் கூடும் என எக்யுவெதர் வானிலையாளர் பொப் லார்சன் தெரிவித்துள்ளார்.



## கியூபெக்கில் இம்முறைதான் வெப்பம் மிக்க குளிர்காலம்!

### நேரத்துடன் வெளியே வந்தது கறுப்புக் கரடி

கியூபெக்,மாரச் 04

கனேடிய வரலாற்றில் இரண்டாவது வெப்பம் மிக்க குளிர்காலமாக கியூபெக்கின் 2023-24 குளிர்காலப் பகுதி பதிவாகியுள்ளதாக கனேடிய வானிலையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1981ஆம் ஆண்டு முதல் 2010 வரையான 30 வருட கால காலநிலை வழிமுறைகளில் பதிவான அளவினை விட அதிகம் வெப்பமான காலப்பகுதியாக 2023-24 குளிர்காலப்பகுதி பதிவாகியுள்ளதாக சுற்றுச்சூழல் கனடா வின் வானிலையாளர் கிரகரி யங் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் அதிகளவான 14.9 செல்சியஸ் வானிலை பெப்ரவரி 27ஆம் திகதி பதிவாகியிருந்தது.

மொன்ரியல் மிருகக்காட்சிசாலையில் வழமையாக குளிர்காலத்தில் வெளியில் வராத கறுப்புக் கரடியானது இம்முறையில் விரைவில் வெளியில் வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கழிவு மேலாண்மை மையத்தில் ஆணின் சடலம் கண்டெடுப்பு!




ஒன்ராரியோ, மாரச் 04

டொரான்டோவில் உள்ள கழிவு மேலாண்மை நிலையத்தில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டொராண்டோ பொலிஸ் சேவையின் கொலை மற்றும் காணாமல் போதல் பிரிவு வெள்ளிக்கிழமை காலை 8:30 மணியளவில் சடலம் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் யார், எங்கிருந்து இந்த சடலம் கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# எட்டோபிகோக்கின் வடக்கில் நடந்த கத்திக்குத்து தொடர்பில் ஒருவர் கைது

ஒன்ராரியோ, மாரச் 04

நேற்று மார்ச் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் எட்டோபிகோக்கின் வடக்கில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஃபின்ச் மற்றும் கிப்லிங் அவென்யூவிற்கு அருகில் உள்ள ரெக்ஸ்டேல் பகுதியில் உள்ள அடுக்குமாடி கட்டடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4:15 மணியளவில் அவர்கள் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டனர் என டொரன்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.